**செ.வெ. எண்: 405** **நாள்: 4.7.2011**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (4.7.2011) தலைமைச் செயலகத்தில், பதிவுத் துறை உயர் அலுவலர்களுக்கு சீருந்துகளும், பதிவுத் துறையில் ஓட்டுநர் பணியில் எவ்வித விபத்துமின்றி 20 ஆண்டுகள் சீரிய முறையில் பணியாற்றிய ஓட்டுநர்களுக்கு தங்கப்பதக்கங்களையும் வழங்கினார்கள்.

பதிவுத் துறையால் மேற்கொள்ளப்படும் பதிவுச் சேவையினை மேலும் சீரிய முறையில் பொது மக்களுக்கு அளிக்கும் வகையில் பதிவுத்துறையின் உயர்அலுவலர்கள், பதிவுத் துறையின் அடிப்படை அலகுகளான சார்பதிவாளர் அலுவலகங்களைக் கண்காணிப்பதுடன், பதிவுப் பணி தொடர்புடைய களப் பணி மற்றும் புலத்தணிக்கை ஆகியவற்றை விரைந்து பார்வையிட்டு, துரிதமாக பொது மக்களுக்கு தீர்வு அளித்திடும் வகையில், இத்துறையின் உயர் அலுவலர்களின் பயன்பாட்டிற்கு 24 சீருந்துகளின் சாவிகளை ஓட்டுநர்களிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கினார்கள்.

அலுவலர்களின் பணித் தேவைகளை உணர்ந்து, வாகன நெரிசல் அதிகமாகவுள்ள இந்தக் காலகட்டத்தில் விபத்துகளின்றி சீரிய முறையில் ஓட்டுநராக பணியாற்றி வரும் பதிவுத்துறைத் தலைவர் அலுவலக சீருந்து ஓட்டுநர்கள் திருவாளர் டி. சின்னசாமி, எஸ். நமச்சிவாயம் ஆகிய இருவரின் பணியினை பாராட்டும் விதமாகவும், பிற சீருந்து ஓட்டுநர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் 4 கிராம் எடை உள்ள தங்கப்பதக்கத்தை ஓட்டுநர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கி கௌரவித்தார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர், பதிவுத்துறைத் தலைவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 4.7.2011